அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் மொத்தமாகக் கேட்டுவிட்டேன். அந்தந்த அமைச்சர்கள் அவர்கள் அவர்களுக்கு வேண்டிய தொகையை மானியக் கோரிக்கையாகக் கேட்பார்கள். எவ்வளவு கேட்டாலும் அளவறிந்து கொடுக்கிறேன் என்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன் , வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

5. அறிவிப்பு.

மானியக் கோரிக்கைகள் 1993-94 அவையில் எடுத்துக்கொள்வது குறித்து (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க் கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :—

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants for the demands for the financial year 1993-94."

6. மானியக் கோரிக்கைகள், 1993-94

(அ) கோரிக்கை எண். 18—மருத்துவம்.

(ஆ) கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண் 18—மருத்துவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் -லைவர் அவர்களே,